# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத் ஆகியோரால் இலங்கை மற்றும் மொரீஷீயசில் UPI பரிவர்தனைகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.</u>**

பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்ரமசிங்க மற்றும் மொரீஷியஸ் பிரதமர் மேன்மைதங்கிய பிரவிந்த் ஜக்நாத் ஆகியோர் இலங்கை மற்றும் மொரீஷியஸில் யுபிஐ பரிவர்த்தனை சேவைகளையும், மொரீஷியஸில் RuPay சேவைகளையும் 2024 பெப்ரவரி 12 அன்று பிற்பகல் 1 மணிக்கு மெய்நிகர் மார்க்கம் மூலமாக ஆரம்பித்து வைக்கின்றனர்.

2. நிதி தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் மற்றும் டிஜிட்டல் பொது கட்டமைப்பு ஆகியவற்றில் இந்தியா முன்னோடியாக வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தியாவின் வளர்ச்சி அனுபவங்களையும், புதிய கண்டுபிடிப்புகளையும் ஏனைய நட்பு நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென பிரதமர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார். இலங்கை மற்றும் மொரீஷியஸ் ஆகிய நாடுகளுடன் இந்தியா கொண்டிருக்கும் வலுவான கலாசார மற்றும் மக்களுக்கு இடையிலான தொடர்புகளைக் கவனத்தில்கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த செயற்பாட்டின் மூலமாக சகல மக்களும் துரிதமானதும் தடையற்றதுமான டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதுடன் நாடுகளுக்கு இடையிலான டிஜிட்டல் தொடர்புகளும் மேம்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

3. இதன் மூலமாக இலங்கை மற்றும் மொரீஷியஸுக்கு பயணிக்கும் இந்திய பிரஜைகளும், இந்தியாவுக்கு பயணிக்கும் மொரீஷியஸ் பிரஜைகளும் யுபிஐ சேவைகளை பயன்படுத்தும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். அத்துடன் மொரீஷியஸில் RuPay அட்டை சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலம், மொரீஷியஸில் RuPay முறையின் அடிப்படையில் மொரீஷியஸ் வங்கிகள் அட்டைகளை வழங்கவும், இந்தியா மற்றும் மொரீஷியஸில் பணப்பரிவர்த்தனைகளுக்கு RuPay அட்டையைப் பயன்படுத்தவும் வாய்ப்பளிக்கின்றது.

**********************

**கொழும்பு**
**11 பெப்ரவரி 2024**

இணையத்தளம்: https://www.mea.gov.in/press-releases.htm?dtl/37612/Prime_Minister_President_of_Sri_Lanka_a

nd_Prime_Minister_of_Mauritius_to_witness_launch_of_UPI_services_in_Sri_Lanka_and_Mauritius